பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 16 வியாழக்கிழமை 01.08.2024 கதிர் 267

## ஜனாதிபதியுடன் குகதாஸன்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று நேரில் சந்தித்து தனதுமாவட்டத்தில்தமிழ் மக்கள் எதிர்நோக்கம் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினார் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவை அடுத்துஅவரதுஇடத்திற்கு தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் குகதாசன்.

பதவியேற்றபின்னர் முதற்றடவையாக ☞ 8

## ஹமாஸ் தலைவர் கொலையின் தாக்கத்தை ஆராய 3 குழுக்கள்

### அரசுத் தலைவர் ரணில் நியமிப்பு





'ஹமாஸ்'அமைப்பின் அரசியல்பிரிவுத்தலைவர் இஸ்மாயில் அப்தெல் சலாம்ஹனியேஈரானில் கொல்லப்பட்டதை அடுத்து இலங்கை எதிர் கொள்ளக்கூடிய தாக்கங்கள், பாதகங் கள் குறித்து ஆராய்ந்து முன்னாயத்த நடவடிக்கைதுகளை எடுப்பதற்காக 3 குழுக்களை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

ஈரானின் புதிய ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகிவிட்டது. இந்த மாதத்தில் வேட்புமனு ஏற்பும் தொடங்கிவிடும். இருந்தாலும் தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் முயற்சியாளர்களால் இன்னும் ஒரு பொது வேட்பாளரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. 7 அரசியல் கட்சியினரும் தமிழ் மக்கள் பொதுச் சபையினரும் சேர்ந்த இந்த முயற்சியில் இறங்கியிருக்கின்றனர். எனினும் வழக்கம்போல ஒருமித்த கருத்துக்கு வருவது இவர்களுக்கு மிகப் பெரும் சிக்கலாகவே தொடர்கின்றது.

அதுமட்டுமல்ல பொது வேட்பாளரின் நோக்கம் மற்றும் தேர்தல் அறிக்கைகளைத் தயாரிப்பதிலும் கடும் இழுபறிகள் தொடர்கின்றன. அரசியல் கட்சிகள் ஏன் இந்தப் பொதுக் கட்டமைப்புக்கு இணங்கி வந்தார்கள் என்கிற உள்ளார்ந்த நோக்கங்கள் இப்போதுதான் படிப்படியாகவெளிவருகின்றனஎன்று இந்தமுயற்சியில்ஈடுபட்டுள்ளஒருவர் தெரிவித்தார். அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதிவேட்பாளர்களில்ஒருவரை ஆதரிக்கும்உள்நோக்கம்இருக்கிறது. எனவே பொது வேட்பாளர் ☞ 2

# இனங்களிற்கான சுயாட்சி மீளப்பெறமுடியா அதிகாரம்

### இனப்பிரச்சினைக்கான தீர்வு இதுவே

### தேர்தல் அறிக்கை விட்டது மக்கள் போராட்ட முன்னணி




சுயாட்சி மிக்க பிரதேசங்கள், இனங்களிற்கான சுயாட்சி உரிமை, மீளப்பெறமுடியாத அதிகாரங்கள் ஆகியனவே இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்று 'அரகலய' மக்கள் போராட்டக்காரர்களினால் ☞ 2

## சு.கவின் ஓர் அணி ரணிலுக்கு ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்குஆதரவுவழங்குவது என்று அமைச்சர் நிமல் சிறபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

சுதந்திரக் கட்சி பல துண்டுகளாகச் சிதறியுள்ள நிலையில் அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா, முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, கட்சியின்முன்னாள்பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கட்சியின் தலைவர் தாங்களே என்று உரிமை கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் ரணிலுக்குத் தமது முழு ஆதரவையும் தெரிவித்து அவரது வெற்றிக்குப் பாடுபடுவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் நிமல் அணியின் முக்கியஸ்தர்கள்ஜனாதிபதியைச் ☞ 2

## முன்னாள் மாகாண உறுப்பினர்கள் 116 பேர் ஜனாதிபதிக்கு முழு ஆதரவு

வரவுள்ளஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவிப்பதாக பொது ஜன பெரமுன மற்றும்ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் 116 பேர் உறுதியளித்துள்ளனர். ரணிலின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன்செயற்படுவார்கள் என்றும் தெரிவித் துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார் ஜனாதிபதி.

நிகழ்வில் உரையாற்றிய அவர், புதிய நோக்குடனும்புதிய ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கலவரங்கள் வெடிக்கக்கூடும்

### விக்னேஸ்வரன் எதிர்வுகூறல்

ஜனாதிபதித் தேர்தலின்பின்னர்இலங்கையில் கலவரங்கள் வெடிக்கக்கூடும். எந்தவொரு வேட்பாளரும் பெரும்பான்மையைப் பெறாத நிலையில் கலவரங்கள் வெடிக்கக் கூடும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைதொடர்பில் எனக்குக்கரிசனைஇருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் கலவரங்கள வெடிக்கக்கூடும்.

சிங்கள வேட்பாளர்களிடையே ஐம்பது சதவிகித வாக்கைப் பெறக்கூடியவர்கள்என்று எவரும்இல்லை. இந்தத் தேர்தலில் பல பேர் போட்டியிடுகின்றார்கள் என்று கூறினாலும் ரணில், சஜித், அநுர என்ற மூன்று பேர்தான் முக்கியமானவர்கள். அவர்களில் எவருக்கும் வெற்றிபெறுவதற்கான பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால் ☞ 2

## பொய் குறித்து அவதானம்

ஜனாதிபதித் தேர்தலில்தபால்மூலம் வாக்களிப்பதற்குஒகஸ்ட் 5 கடைசித் தினம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுதெளிவுபடுத்தியுள்ளது. ஒகஸ்ட் 15 வரை விண்ணப்பிக்கலாம் என்று சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல் பொய்யானது என்றும் அது தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோருக்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முக்கிய அறிவித்தல் அடங்கிய ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ☞ 8

## 6 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்

2024.செப்டெம்பர்21 ஆம்திகதிஇடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுதற்கு நேற்று வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 6 வேட்பாளர்கள் கட்டுப் பணம்செலுத்தியுள்ளனர்.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பில் போட்டியிட 4 வேட்பாளர்களும், சுயாதீனமாகப்போட்டியிட 2 வேட்பாளர்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ☞ 8

## கனிய மணல் அகழ்வுக்கு முல்லை மக்கள் எதிர்ப்பு

### ரவிகரன் தலைமையில் திரண்டதால் அதிகாரிகள் பின்வாங்கினர்



முல்லைத்தீவுக் கடற்கரையில் கனிய மணல்அகழப்படுவதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இது தொடர்பான பூர்வாங்க ஆய்வுப் பணிகளுக்காக வந்த அதிகாரிகளை அவர்கள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்கனியவள மணல்அகழ்வதற்கான முன்னாயத்தக் ☞ 8

## சாரணர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க ஆளும்தரப்பு உதவி

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

சாரணர்கள்எண்ணிக்கையை இரட்டிப்பாகஆளும்தரப்புபோதிய உதவிகளைச் செய்யும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேசமாநாட்டுமண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை பெண் சாரணர் இயக்க உறுப்பினர்களுக்கு 'ஜனாதிபதி பதக்கம் ' வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

விடயத்தில் 2ஆம் 3ஆம் தெரிவுகள் மூலமாக தமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவை குத்தி முறிகின்றன என்கிறார் அவர்.

பொது வேட்பாளர் தெரிவில் குளறுபடிகள், குத்துக்கரணங்கள், கும்மியடிப்புக்கள் எல்லாம் இடம்பெறுகின்றனஎன்பதைவடக்கு மாகாணமுன்னாள்முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன்ஒத்துக்கொண்டார். நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் உள்வீட்டு விவகாரங்களை மெல்ல அவிழ்த்துவிட்டார். முழுமையாகச் சொல்லவில்லை என்றாலும் உள்ளே நடக்கும் அடிபாடுகளை, ஏனைய தலைவர்களின் மலிமான செயல்களை அவர் போட்டுடைத்தார். எப்படியிருந்தாலும் இன்னும் ஒரு வாரத்திற்குள் பொது வேட்பாளரைக் கண்டுபிடித்துவிடுவோம் என்றார். அது நடக்குமாஎன்பதைப்பொறுத்திருந்து பார்ப்போம்.

''தமிழ்ப் பொது வேட்பாளர் தேர்வில் பலருடைய பெயர்கள் இருக்கின்றன. அதில் ஒருவரைத் தேர்வு செய்வதென்றால் மாறி மாறி குற்றச்சாட்டுகள் சொல்லி வருகின்ற நிலைமை உள்ளது.

அதிலும் ஏதாவது ஒருவிதத்தில்தான் நினைக்கின்ற ஒருவர்தான் தமிழ்ப் பொது வேட்பாளராக வர வேண்டுமென யோசிக்கின்றவர்களும் இருக்கின்றனர். அவர்கள் மிடுக்கோடு பேசுகின்றவர்களாக இருக்கின்ற நிலைமையில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் சற்று தாமதமாகின்றது.

இவர்கள்ஒருவரைச்சுட்டிக்காட்டி அவரை அழைத்தால் நான் வரமாட்டேன் எனக் கூறுகின்ற நிலைமையும் உள்ளது. உண்மையில்ஒருவரைத்தெரிவுசெய்வதில்சில சிக்கல்கள்இருக்கின்றன. ஆனாலும் அநேகமாக இந்த வாரத்துக்குள் தமிழ்ப்பொதுவேட்பாளர்ஒருவரைத் தேர்ந்தெடுத்து விடுவோம்.

இந்தத்தமிழ்ப்பொதுவேட்பாளர் விவகாரத்தைக் கைவிடச் சொல்லி தூதரகங்களின் அழுத்தம் ஏதும் இல்லை. இந்தியத் தரப்பின் அழுத்தங்கள் இருப்பதாக எனக்குத் தெரியாது. என்னுடன் இப்படிப்பட்ட விடயங்களை அவர்கள் கதைப்பது குறைவு. ஏதாவது கலாசாரம், இலக்கியம், சமயம் ரீதியாகத் தான் என்னுடன் அவர்கள் கதைப்பார்கள். இப்படிப்பட்ட விடயங்கள. கதைப்பது குறைவு. அதனால் இதைப் பற்றி எனக்குத் தெரியாது.

ஆனால், சுமந்திரன்தான் இப்ப பெரிய சத்தம் எல்லாம் போட்டுக் கொண்டிருக்கின்றார். எப்படியாவது தமிழ்ப் பொது வேட்பாளர் நியமிப்பதை நிறுத்துவோம் என்கிறார். தங்களைத் துரோகி என்று சொன்னாலும் பயப்படமாட்டோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

இதனைவிடத் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டாமெனவேறுஅழுத்தங்கள் வரவில்லை. ஆனால், சிங்கள வேட்பாளர்களிடைய ஒருவிதமான அச்சமும் பயமும் அருவருப்பும் வந்திருப்பதாகத் தெரிகின்றது' - என்றார் அவர்.

விக்னேஸ்வரன் கூறுவதைப் போன்று அவர் வந்தால் நான் வர மாட்டேன் என்று கூறுவதெல் லாம் அரசியல் கட்சிகளின் சார்பிலானவர்களை நிறுத்துவதற்கான முயற்சியின்போதுதான். இந்த முயற்சி தொடங்கப்பட்டபோது கட்சி சார்பில் அல்லாத மக்களுக்கு பெரிதும் பரீட்சயம் இல்லாத, ஒரு அடையாளத்துக்கான நபராக ஒருவரைநிறுத்துவதுகுறித்துத்தான் தமிழ் மக்கள் பொ-துச் சபையினர் பேசினர். ஆனால், அவர்கள் விரும்பிய வழியில் ஒருவரை நிறுத்துவது என்பது இப்போது பெரும் சவாலுக்குரியதாக மாறி இருக்கின்றது. கணிசமான அளவு வாக்குகளையாவது பெறவேண்டுமானால்தெரிந்தமுகம் ஒன்றை நிறுத்தியே ஆகவேண்டும் என்றுபிடிவாதமாகநிற்கின்றனவாம் கட்சிகள். தெரிந்த முகம் என்றால் எந்தக்கட்சியைச்சார்ந்தவர்என்பதில் தொடங்குகிறது பிரச்சினை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இனங்களிற்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கப்பட்ட மக்கள் போராட்ட முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாகஅறிவித்துள்ள மக்கள் போராட்ட முன்னணி, அதற்கான தேர்தல் அறிக்கையை நெற்றுக் கொழும்பில் வெளியிட்டது. அந்த நிகழ்வில் பேசிய கட்சியின் செயற்பாட்டாளரான ராஜ்குமார் ரஜீவ்காந் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஒரு இருண்ட யுகத்திலே மிக மோசமான சூழ்நிலையிலே மிக மோசமான ஆட்சியாளர்களின் கரங்களிலே சிக்குண்டபடி அன்றாட வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கின்றோம்,

இந்த அதிகார வர்க்கம் எங்களை மிகமோசமானஆட்சிக்குமுறைக்குள் வைத்துக்கொண்டு, செல்வந்தர்களிற்காகவும்பெருநிறுவனங்களின் முதலாளிமார்களிற்காகவும் ஓர் ஆளும்தரப்பைமீண்டுமொருமுறை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இவர்கள் அடிக்கடி மக்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வருகின்றனர். உண்மையில் இவர்கள் கூறும் மக்கள் என்ற வார்த்தை எதனை சொல்கின்றது என்பதை இவர்கள் அறிவார்களா?

மக்களின் கொள்கை என்ற தேர்தல்விஞ்ஞாபனத்துடன்நாங்கள் இன்று உங்கள் அனைவரையும் சந்திக்கின்றோம்.

எங்களைபொறுத்தவரைமக்கள் என்பது ரணில்விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து நிற்கின்றன அதிகார வர்க்கமோ அல்லது இந்த கொடுர ஆட்சியிலே தங்களிற்குரிய வருமானத்தைத் தேடும் செல்வந்தர்களோ முதலாளிகளோ இல்லை.

இந்த நாட்டில் அன்றாடம் வாழ்வதற்கு தவித்துக்கொண்டிருக்கும் விளிம்புநிலைமக்கள்,அன்றாடவாழ்க்கையை முன்னநகர்த்துவதற்கு கஸ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள். விவசாயிகள் மீன்பிடித் தொழிலாளர்கள் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் மலையக தமிழ் மக்கள் மற்றும் முஸ்லீம்கள் ஆகியோரைத்தான் நாங்கள் மக்கள் என்ற வரையறைக்குள் கொண்டுவருகின்றோம்.நாம்யாரின் பக்கம் நிற்கவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

எந்தவொரு விடயத்தை எடுத்தாலும்பலவீனமானவர்களின் பக்கம் நின்று பேசுவதுதான் அரசியலில் நியாயமான விடயம் என்பதை நாங்கள் அறிவோம். எனவே தான் எங்களின் கொள்கை பிரகடனம் பலவீனமானவர்களை பலப்படுத்துவதற்கான பல அடிப்படைகளைக் கொண்டிருக்கின்றது.

இன்றுநாங்கள்வெளியிடவுள்ள இந்தக் கொள்கைப் பிரகடனம் பல கேள்விகளிற்குப்பதிலாகஅமையும்.

ஏன் நாங்கள் அரசியலுக்கு வரவேண்டிய தேவையிருந்தது ஏன்ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யவேண்டியதேவையிருந்தது என்பதை எங்கள் கொள்கை அறிவிப்புத் தெரிவிக்கும்.

எங்களின் கொள்கை ஒன்றே எங்களின் நம்பிக்கை.

ஏனைய வேட்பாளர்களிடம்இல்லாத பல விடயங்கள், மக்கள் என்ற ஒரு சக்தியை நம்பி மக்களின் கரங்களில்தான் இறைமை உள்ளது என்பதை நம்பி நாங்கள் இந்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குகின்றோம்.

நாங்கள் பணக்காரர்களோ செல்வந்தர்களோ இல்லை,முதலாளிகளோ அதிகாரவர்க்கத்தினரோ இல்லை,நாங்கள் பாதிக்கப்பட்;ட மக்களின் ஒடுக்கப்பட்ட மக்களின் அடித்தட்டு மக்களின் பிரதிநிதியாகத்தான் இந்த கொள்கை அறிவிப்பை முன்வைக்கின்றோம்.

ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்கனவே ஜனாதிபதிகளாக வந்தவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வாகப்பலபொய்களைகூறியிருக்கின்றார்கள். ஆனால் எவருமே தமது தேர்தல் அறிக்கையில் தீர்வு என்ன என்பதைச் சுட்டிக்காட்டியதில்லை.

முதன்முதலாக நாங்கள் இந்த இனவாதிகளின் முகத்திரையை கிழித்தெறிந்து உண்மையான பிரச்சினையை அடையாளம் கண்டு, எங்களின் தேர்தல் விளக்கவுரையில், கொள்கை அறிக்கையில் மிக அழகாக, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை மிகவும் தெட்டத்தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

சுயாட்சி மிக்க பிரதேசங்கள், இனங்களிற்கான சுயாட்சி உரிமை, மீளப் பெறமுடியாத அதிகாரங்கள், வடக்குகிழக்கு தமிழ் மக்கள் மிகநீண்டகாலமாகஎதிர்நோக்குகின்ற காணிப் பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களமயப்படுத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல்கைதிகளின் பிரச்சினை, போன்றவற்றை தெட்டத்தெளிவாக அடையாளம் கண்டுள்ளோம். அவற்றுக்கான தீர்வையும் முன்வைத்துள்ளோம். மக்களுடையபிரச்சினைஅவர்களின் தேவை அடிநாதம் என்னவென்பது எங்களிற்கு தெரியும்.

நாங்கள் மக்களிடமிருந்து வேறுபட்ட ஒரு குழுவாக அதிகாரம் மிக்க ஒரு குழுவாக நிற்பதற்கு ஒருபோதும் விரும்பவில்லை நாங்கள் மக்களோடு மக்களாக நிற்கின்றோம் - என்றார்.

## ஹமாஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கச் சென்றிருந்த ஹனியே அங்குஅவர்தங்கியிருந்தஇல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டார். இந்தத்தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதாக ஹமாஸ் அமைப்புதெரிவித்துள்ளது. பலஸ்தீன மக்களின்விடுதலைக்காகப்போராடி வரும் அமைப்பு ஹமாஸ். ஈரான் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது.

ஹனியே 2017 ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அடுத்த ஆண்டே அவரைப் பயங்கரவாதி என்று அமெரிக்கா அறிவித்தது. கடந்த ஆண்டு ஒக்டோபரில் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலில் தாக்குதல் நடத்திய 1200 பேரைக் கொன்றதுடன் பலரைப் பிணைக் கைதிகளாகவும் பிடித்துச் சென்ற சம்பவத்தை அடுத்து ஹமாஸ் தலைவர்கள் அனைவரையும் கொல்லுவோம் என்று இஸ்ரேல் அறிவித்திருந்தது. இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலையில்ஹனியேவின் 3மகன்களும்4பேரப்பிள்ளைகளும் கொல்லப்பட்டிருந்தனர்.

பாலஸ்தீனத்திற்கு வெளியே கட்டார் போன்ற நாடுகளிலே வாழ்ந்து வந்த ஹனியே, புதிய பிரதமரின் பதவியேற்புக்காக ஈரானிற்குச் சென்றிருந்தார். பதவியேற்புநிகழ்வில் பங்குபற்றிய பின்னர் அவரது இருப்பிடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவரும் மெய்ப்பாதுகாவலர்களும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஈரானிய புரட்சிப்படைஅதிகாரிகளும்இதனை உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

வழிகாட்டப்படும்ஏவுகணைகள் மூலம் இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியிருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் இஸ்ரேல் இந்தத் தாக்குதல் குறித்து உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை. ஈரானில் அல்லது வெளிநாடுகளில் தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து இஸ்ரேல் பொதுவாகவேஅறிவிப்புஎதனையும் வெளியிடுவதில்லை. இருப்பினும் ஹனியேவின்மறைவு"உலகத்தை ஒருசிறந்த இடமாக மாற்றுகின்றது" என்று இஸ்ரேலின் கலாசார அமைச்சர் அமிக்கேய் எலியாஹூ தனதுஎக்ஸ்தளத்தில்பதிவிட்டுள்ளார்.

ஹனியேவின் கொலை மத்திய கிழக்கில் பதற்றத்தை அதிகரித்து இஸ்ரேல் ஷமற்றும் ஈரான் இடையே போரை ஏற்படுத்தக்கூடும் என்கிற அச்சம் நிலவுகின்றது. இதனையடுத்தே இந்தக் கொலையால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதகம், தாக்கம் குறித்து ஆராய்ந்து முன்னாயத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக 3 குழுக்களை அரசுத்தலைவர்ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

ஹனியேவின்படுகொலையின் எதிரொலியாக தேசிய பாதுகாப்பில் ஏற்படும் தாக்கம் தொடர்பாக ஆராய்வதற்கான ஒரு குழுவும் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்காக மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இந்தஇரு குழுக்களின் செயற்பாடுகளையும் கண்காணிப்பதற்கான மூன்றாவது உயர்மட்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரமற்றும்தேசியபாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் அங்கத்துவத்துடன் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் மீதான தாக்கம் குறித்து ஆராய்வதற்கான குழுவின் உறுப்பினர்களாக, தேசிய பாதுகாப்புதொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, மின்சக்திமற்றும்எரிசக்திஅமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன ஆகியோர் செயற்படுவர்.

மேற்படி இரு குழுக்களையும் கண்காணிக்கும் உயர்மட்டக் குழுவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் உள்ளடங்குவர்.

இரு குழுக்களும் சமர்ப்பிக்கும் அறிக்கையின்படி உயர்மட்டக் குழு உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்று அரச தலைவர் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஹனியேவின் படுகொலைக்கு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கண்டனம் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுடன் நேற்று நடந்த சந்திப்பில் உரையாற்றிய பேதே அரசுத் தலைவர் இந்தக் கண்டனத்தை வெளியிட்டார். இவ்வாறான செயற்பாடுகளை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஹனியே படுகொலை செய்யப்பட்டதன் மூலம், சர்வதேச மனிதாபிமான சட்டங்களை அப்பட்டமாக மீறப்பட்டமையானது மத்திய கிழக்கு பிராந்தியத்தின் அமைதிக்குஉச்சகட்டஅச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுஎன்றுஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

''எதிர்காலத்தில் இதன் நேரடி மற்றும் மறைமுக விளைவுகளை நம் நாடு சந்திக்க நேரிடலாம். இந்த நேரத்தில் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு அமைதியின் செய்தியே தேவைப்பட்டாலும், தொடர்ச்சியாகப்பதிவாகும்இத்தகைய மனிதாபிமானமற்றதாக்குதல்களின் விளைவுகளை அப்பகுதியும் ஒட்டுமொத்த உலக மக்களும் அனுபவிக்க வேண்டியுள்ளமை வருத்தமளிக்கிறது.

பாலஸ்தீன மக்களுக்கு விரைவான மற்றும் நிலையான போர் நிறுத்தம் மற்றும் அவசரமாக தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்துமாறு சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தப் பிராந்தியத்தில் நிரந்தர அமைதிக்காக உலக நாடுகள் அனைத்தும் முன்நிற்க வேண்டும். மனித நேயத்தை மதிக்கும் தலைவர்களாகிய நாம் இத்தகைய மனிதாபிமானமற்றதாக்குதல்களை வன்மையாகக்கண்டிக்கவேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத் திட்டத்துடனும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லவே தான் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்என்றுதெரிவித்தார்.

மாகாண சபைகள், கொழும்பு அரசு உட்பட 10 நிர்வாகக் கட்டமைப்புகளின் ஊடாக நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதற்குத் தான் தன்னைஅர்ப்பணிப்பணித்துள்ளார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந் நிகழ்விலேயே மாகாண முன்னாள் சபை உறுப்பினர்கள் 116 பேர் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காகத்தாம்அர்ப்பணிப்புடன் செயல்படுவர்கள் என்று உறுதியளித்தனர்.

## சு.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன்போது சுதந்திரக் கட்சியின் ஆதரவைஜனாதிபதிரணிலுக்குநிமல் அணியினர் நேரில் தெரிவித்தனர்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

இந்தத் தேர்தலில் மொட்டுக் கட்சியின் பங்கு குறைவுதான். திரும்பவும் ஒரு தேர்தல் வந்தால் அந்தக்கட்சி முழுமையாக அழிக்கப்பட்டு விடும். அதாவது தெற்கிலே இருக்கின்றஅவர்களுடையஆசனங்கள் எல்லாம் ஜே.வி.பி. கட்சிக்குப் போய்விடும் என்பது என்னுடைய கருத்து. அந்தளவுக்குஇந்தநாட்டுக்கு அவர்கள் செய்த துரோகம் மக்கள் மனதிலே இருக்கின்றது. இந்த நாட்டை அவர்கள் சூறையாடி இருக்கின்றார்கள், போர், போர் என்று போரைக் காரணமாகக்காட்டி அவர்கள் தங்களைத் தாங்களே வளர்த்துக்கொண்டார்கள். இவையெல்லாம் மக்களுக்கு இப்போது நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்கள் கட்டாயமாக ரணிலுக்கு ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்பது என்னுடைய கருத்து. எந்தவிதத்திலும் தற்போது இருக்கின்ற நாட்டின் தங்களுடைய கட்சியின் தனித்துவத்தை வெளிக்கொணர வேண்டும் என்ற முறையில் ஏதோ சிலவற்றைப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

மொட்டுக் கட்சியில் உள்ள பலர் ஏற்கனவே ரணிலுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இருந்தாலும் அந்தக் கட்சி தங்களுடைய தனித்துவத்தை எடுத்துக் காட்ட தனியொரு வேட்பாளரைப்போடக்கூடும். இருந்தாலும்அவர்களின்92நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவு என்றால் மற்யைவர்களும் அதே மனநிலையில்தான் இருப்பார்கள். எனினும், முழுமையாக ரணிலிடம் தாங்கள் சரணடைந்து விட்டோம் என்று தெரியாமல் இருப்பதற்காக இறப்பின் தருவாயில் இருப்பவன் வைக்கோலைப் பிடிக்கின்ற மாதிரி ஏதாவது ஒன்றைச் சொல்லி தாங்கள் இன்னும் மக்கள் ஆதரவுடனே இருக்கின்றோம் என்று காட்டுவதற்குப் பலதும் பேசுவார்கள் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்றோம் என்று காலம்கழிப்பது மக்களுக்கு செய்கின்ற துரோகம்

## ஹரீஸ் எம்.பி. சுட்டிக்காட்டு



(நூருல் ஹுதா உமர்)

நாடாளுமன்ற உறுப்பினர் எனும் அபிமானத்திற்கு நாங்கள் இறைவனிடத்தில் பதில் சொல்ல வேண்டும். எனவே அந்தக் கடமை உணர்வில் தான் நாங்கள் இவ்வாறான சேவை திட்டங்களை மக்களுக்கு வழங்குகின்றோம். இருந்தாலும் நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்றோம் என்ற எண்ணத்துடன் சாக்கு போக்குடன் காலத்தை கழிப்பது மக்களுக்கு செய்கின்ற துரோகம் என்றுதான் நான் சொல்வேன்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த நான்கு வருடங்களாக பல தேவைகள் காத்திருந்தது. எனவே பிரதேச வாதம் இனவாதம் பாராமல் நான் சேவைகளை வழங்கி வருகின்றேன் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் அபிவிருத்திப்பணிகளை தொடங்கிவைத்து உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது, துரதிஷ்டவசமாக இந்த நாட்டில் ஏற்பட்ட கொரோனா மூலம் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது நாட்டின் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் உள்ள எந்த அமைச்சருக்கோ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ நாட்டின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. ஆனால் இப்போது ரணில் விக்ரமசிங்க அவர்கள் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சில நிதி ஒதுக்கீடுகளை செய்ய முற்பட்டபோது. துரதிஷ்டவசமாக எதிர்க்கட்சியில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படாமல் ரத்து செய்யப்பட்டிருந்தது. ஏனென்றால் நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள். நாங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்றோம்.

இருந்தபோதிலும் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை உங்களுக்கு தெரியும் ஒரு கற்றறிந்த கல்விமான் அதேபோல இனவாதரீதியாக சிந்திக்கின்ற ஒரு கடும்போக்கு வாதி அல்ல. மக்களினுடைய பிரச்சினையினை கேட்டறிகின்ற ஒரு ஜனாதிபதியாக இருந்தபடியினால் நான் தைரியமாக சென்று நமது மாவட்டத்தின் அவல நிலை பிரச்சினைகளை எடுத்துக் கூறினேன். நீண்ட காலமாக நாங்கள் யுத்தத்தில் முகம் கொடுத்தது மட்டுமில்லாமல் அரசின் அபிவிருத்தித் திட்டத்தில் முழுமையாக உள்வாங்கப்படாத மாவட்டம் என்பதை சுட்டி காட்டியதினால் எங்களுக்கு மெது மெதுவாக நிதிகளை ஒதுக்கீடு செய்ய ஆரம்பித்தார்.

அதனால்தான் நான் அம்பரை மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதி என்ற ஒரு கடமையில் இந்த அபிவிருத்தி திட்டத்தை உங்களுக்காக கொண்டு வந்திருக்கின்றேன்- என்றார்.(05)

# தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்கு தமிழ் பொது வேட்பாளர் தேவையா?

## வவுனியா பொது அமைப்புகள் கலந்துரையாடலுக்கு அழைப்பு

தமிழ் பொது வேட்பாளர் தமிழரின் அரசியல் இருப்புக்கு தேவையா? என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடலுக்கு வவுனியா பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளது.

அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் சில சிவில் அமைப்புகளும் தமிழ் தேசியப்பரப்பில் உள்ள சில கட்சிகளும் ஒன்றிணைந்து எடுத்துள்ள தமிழ் பொது வேட்பாளரை களம் இறக்குவது தொடர்பான நிலைப்பாடு சாத்தியமானதா என்பது தொடர்பில் வவுனியா பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து வவுனியா மக்களினுடைய நிலைப்பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் அது தொடர்பிலான கருத்துக்கணிப்பை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் தமிழ் பொது வேட்பாளரை களம் இறக்குவது தொடர்பில் செயற்பட்டு வரும் சிவில் அமைப்புகள் சிலவும் தமிழ் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் சிலவும் வவுனியா பொது அமைப்புக்களுடன் எவ்விதமான கலந்துரையாடலையும் மேற்கொள்ளாத நிலையில் இவ்விடயம் தொடர்பில் வவுனியா பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் என்ற ரீதியில் ஆக்கபூர்வமான செயல் நிலைப்பாட்டை மக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கோடு தற்காலத்தில் தமிழர்களின் அரசியல் இருப்புக்கு தமிழ் பொது வேட்பாளரின் தேவை அவசியமானதா என்பது தொடர்பான கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடல் ஓகஸ்ட் 3 காலை 9.30 மணிக்கு வாடி வீட்டில் இடம்பெறவுள்ளது. எனவே ஆர்வமுள்ள தமிழ் அரசியல் பரப்பில் செயற்பாடு உள்ளவர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.(05 - 100)

# வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஆயுதங்களுடன் ஒருவர் கைது



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுரியா நகர் பகுதியில் ஆயுதங்களுடன் செவ்வாய்க் கிழமை இரவு நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர்களுக்கு கிடைத்த இரகசியத்தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போதே ஆயுதங்களுடன் 43 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ரீ56 ரக இரு துப்பாக்கிகள், வாள் 1, பைனோ 1, துப்பாக்கி ரவைகள் 60, மெகசீன் 2 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரையும் ஆயுதங்களையும் வாழைச்சேனை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# தாயகம் திரும்பியவர்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்

## தம்பலகாமத்தில் மதிப்பீட்டுக் கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ.எச்.)

ஜப்பான் நாட்டின் நிதி உதவியுடன் சர்வதேச புலம்பெயர்தலுக்கான நிறுவனம் இணைந்து வெளிநாட்டில் இருந்து வருகை தந்தவர்களுக்கும் நலிவுற்ற குடும்பங்களுக்குமான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முதற்கட்ட செயற்பாட்டு மற்றும் மதீப்பீடு தொடர்பிலான நிகழ்வொன்று செவ்வாய்க்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை அடையாளப் படுத்துவதற்கான தரவு சேகரித்தல் மற்றும் கணிப்பீடு நடவடிக்கைகளுக்காக ஈ.எம்.எல். நிறுவனம் மூலமான பயிற்சிகள் இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்காக வழங்கப்பட்டதுடன் குழு ரீதியான வாழ்வாதாரச் செயற்பாட்டை முன்னெடுப்பது தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ப்பட்டன.

இதில் தம்பலகாமம், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த நலிவுற்ற மற்றும் புலம்பெயர்ந்து நாடு திரும்பிய சுமார் 81 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வளவாளராக சட்டத்தரணி பி.முகுந்தன் உட்பட குறித்த நிறுவனத்தின் முகாமையாளர், ஒருங்கிணைப்பாளர் என பலர் திறம்பட பயிற்சியளித்தனர்.

இதில் ஈ.எம்.எல். ஆலோசனை நிறுவன உத்தியோகத்தர்கள், சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் திட்ட இணைப்பாளர் எம்.மேரி, வி.சசிகாந் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)

# நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் இரு மாணவர்கள் சதுரங்க போட்டியில் சாதனை



(எம் சியாஜ்)

புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் தரம் 02 மற்றும் 03 ஐச் சேர்ந்த மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான திறந்த சதுரங்க போட்டியில் பங்குபற்றிய 36 மாணவர்களில் 27 மாணவர்கள் மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இதில் மாவட்ட செம்பியனாக 07 வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.யூ அஹமட் மற்றும் 09 வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.ஐ உமைர் ஆகிய இருவரும் தெரிவாகி பாடசாலையின் வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளார்கள் என பாடசாலையின் அதிபர் எம்.எம் ஹுதைபா தெரிவித்துள்ளார்.

இவர்களின் இந்த வரலாற்று சாதனைக்கு இவர்களை பயிற்வித்த ஆசிரியர் அப்ரீத் அவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்ட ஆசிரியர் சுக்ரி மற்றும் பாடசாலையின் உப அதிபர் ஏ ஆர்.எம் புவாஸ் ஆகியோருக்கும் வெற்றி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக் களையும் பாடசாலையின் நிர்வாகம் சார்பாக அதிபர் எம்.எம் ஹுதைபா தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மர்மம்தான் என்னவோ?

இலங்கை அரசுத் தலைவர் தேர்தலையொட்டிய பரபரப்புக்கள், பரப்புரைகளுக்கு மத்தியில் தமிழர்களின் உரிமைகள், வேணவாக்கள் தொடர்பில் தெற்கிலிருந்து சாதகமான அதேநேரம் சன்னமான ஒரு குரல் ஒலிக்கிறது. ஆனால், அந்தக் குரல் கடந்த பல தசாப்தங்களாகத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அரசியல் தரப்பினதும் கவனத்திற்கும் கரிசனைக்கும் உரியதாக இல்லாமல் இருப்பது ஆச்சரியப்படுத்துகின்றது.

கோட்டாபய ராஜபக்சவை அரசுத் தலைவர் பதவியிலிருந்து விரட்டியடித்து, ராஜபக்சக்களை அதிகாரக் கதிரையில் இருந்து அகற்றிய 'அரகலய' போராட்டக் குழுவினர் மக்கள் போராட்ட முன்னணி என்கிற அரசியல் தரப்பாகப் பரிணமித்திருக்கிறார்கள். தமது போராட்டக் களத்தில் காணப்பட்ட முற்போக்கான அம்சங்களை அவர்கள் அதேவிதத்தில் அரசியல் களத்திலும் நகர்த்த முற்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் இந்த அரசுத் தலைவர் தேர்தலிலும் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர். அதற்கான தேர்தல் அறிக்கையை அவர்கள் வெளியிட்டுள்ளனர். அது தமிழர்களின் கவனதையும் கரிசனையையும் அதிகம் ஈர்த்துக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

சுயாட்சிமிக்கபிரதேசங்கள், இனங்களிற்கான சுயாட்சி உரிமை, மீளப்பெறமுடியாத அதிகாரங்கள் ஆகியனவே இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்று 'அரகலய' மக்கள் போராட்டக்காரர்களினால் தொடங்கப்பட்ட மக்கள் போராட்ட முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கூட்டாட்சி (சமஷ்டி) என்பதன் கீழ் தமிழர்கள் இதுவரையில் கேட்டு வந்த அரசியல் அதிகாரங்கள் இவையே. வடக்கு கிழக்கை தமிர்களின் தாயமாக அங்கீகரித்து அதற்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்பதும் அப்படி வழங்கப்படும் அதிகாரங்கள் எப்போதும்மீளப்பெறப்படக்கூடியவையாகஇருக்கக்கூடாதுஎன்பதுமே தமிழர்களின் முதன்மைக் கோரிக்கையாக அமைந்துள்ளது.

தீர்வைத் தமிழ், சிங்கள இனங்களுக்கு இடையே மட்டுமானதாக அன்றி மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இன ரீதியில் அணுகி அவர்களுக்கும் இனங்களிற்கான சுயாட்சி, சுயாட்சி மிக்க பிரதேசங்கள் என்கிற ரீதியில் இன்னும் முற்போக்காகவே இந்தப் போராட்ட முன்னணி தனது தீர்வை முன்வைத்துள்ளது.

அதனை வரவேற்று அதனுடன் அணிசேர வேண்டிய தமிழ்க் கட்சிகளோ முஸ்லிம் கட்சிகளோ அதனைத் திரும்பியும் பார்த்ததாகத் தெரியவில்லை. தாம் கேட்கும் உரிமைகளைத் தீர்வாகக் குறிப்பிடும் ஓர் அமைப்பைத் தமது அரசியல் தோழமையாக்கி அதனுடன் கூடச் சேர்ந்து பயணிக்கவேண்டிய தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அரசியல் தரப்புக்களும் அது குறித்துக் கிஞ்சித்தும் சித்தித்ததாகவோ அக்கறை செலுத்தியதாகவோ தெரியவில்லை.

தமது கோரிக்கைகளுக்கு ஆதரவான தெற்கு சக்திகளோடு கைகோர்த்துப் பயணிக்கவேண்டிய இந்தக் கட்சிகளும் அரசியல் தரப்புக்களும் அரசுத் தலைவர் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்றோ அல்லது தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்தோ அல்லது தேர்தலைப் புறக்கணிப்பது– குறித்தோதான் கவனம் செலுத்துகின்றன என்பது ஏமாற்றத்தை அளிக்கின்றன.

மக்கள் போராட்ட முன்னணி தனது தேர்தல் அறிக்கையில், "எங்களைப் பொறுத்தவரை மக்கள் என்பது ரணில்விக்கிரமசிங்கவுடன்கைகோர்த்து நிற்கின்றன அதிகார வர்க்கமோ அல்லது இந்த கொடூர ஆட்சியிலே தங்களிற்குரிய வருமானத்தைத்தேடும்செல்வந்தர்களோமுதலாளிகளோஇல்லை. இந்த நாட்;டில் அன்றாடம் வாழ்வதற்கு தவித்துக்கொண்டிருக்கும் விளிம்புநிலைமக்கள், அன்றாடவாழ்க்கையைமுன்னநகர்த்துவதற்கு கஸ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள். விவசாயிகள் மீன்பிடித்தொழிலாளர்கள் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் மலையக தமிழ் மக்கள் மற்றும் முஸ்லீம்கள் ஆகியோரைத்தான் நாங்கள் மக்கள் என்ற வரையறைக்குள் கொண்டுவருகின்றோம். நாம் யாரின் பக்கம் நிற்கவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளது.

எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் பலவீனமானவர்களின் பக்கம் நின்று பேசுவதுதான் அரசியலில் நியாயமான விடயம் என்பதை நாங்கள் அறிவோம். எனவேதான் எங்களின் கொள்கை பிரகடனம் பலவீனமானவர்களை பலப்படுத்துவதற்கான பல அடிப்படைகளைக் கொண்டிருக்கின்றது என்றும் கூறியுள்ளது. இப்படிப் பலவீனமானவர்களின் அரசியலைப் பிரதிநித்துவப்படுத்தும் கட்சிகளும் தரப்புக்களும் மக்கள் போராட்ட முன்னணியின் அரசியல் நகர்வுகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதன் மர்மம்தான் என்னவோ? உண்மையில் இவர்கள் பலவீனமான மக்களின் பிரதிநிதிகள்தானா? அரசியல் அதிகாரங்களைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தருவதுதான் இவர்களது நோக்கமாக என்கிற கேள்விகளையும் இது எழுப்பி நிற்கின்றது.

# ராஜபக்சக்களின் பிரிவு ரணிலுக்கு சாதகமே!



கொழும்பிலிருந்து ர.ஜெயசூரிய

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை விட்டுப் பிரிந்து ஜனாதிபதித் தேர்தலில் தனது சொந்த வேட்பாளரை நிறுத்துவது என்று திங்கட்கிழமை தீர்மானித்தது. அந்த நடவடிக்கை அந்தக் கட்சியைப் பிளவுபடுத்தியது. ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின்ஆளும்தரப்பில் இணைந்திருந்த பெரமுனவின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இருந்து வெளியேறினர். அன்றிரவே ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்தில் கூடி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாகச் செயற்படுவது என்று முடிவெடுத்தனர்.

பெரமுனவில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பிளவை யூகிக்கக்கூடியதாகவே இருந்தது. மொட்டுக் கட்சியின் தனி வேட்பாளரை நிறுத்தும் முயற்சி அவநம்பிக்கை நிறைந்தது. ராஜபக்சக்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கும். இந்த முயற்சி வெற்றியளிப்பதற்கான வாய்ப்புக்களைக்கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் களத்தில் நிலவும் சமன்பாடுகளைக்கூட கணக்கில்எடுத்ததாகஅதுஇல்லை. நீண்டகாலத்திற்குப் பின்னராவது, நாமல் ராஜபக்சவின் அரசியல் வெற்றிக்காக மொட்டுக் கட்சியை ராஜபக்சக்கள் கோட்டையாகத் தக்கவைப்பதற்குத்தான் இந்த முயற்சி உதவும்.

ராஜபக்சக்களின் இந்த நகர்வினால் மொட்டுக் கட்சி தனது திறமையான நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்துள்ளது. அவர்களை ரணில் தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளார். இப்போது ரணிலுடனான உறவு போதும் என்று ராஜபக்சக்கள் தீர்மானித்துவிட்டனர். கோபத்தின் உச்சத்திலிருந்த மக்கள்கூட்டத்தாலும்இளைஞர்களாலும்பேரவாவியில் தூக்கி விசப்படுவார்களோ என்கிற அச்சத்தில் இருந்து விடுபட்டு ராஜபக்சக்களும் அவர்களது கூட்டாளிகளும் சுதந்திரமாக அரசியல் நடத்த முடிகிறது என்கிற நிலமை அவர்களின் இந்த முடிவுக்குக் காரணமாக இருக்கலாம். இந்த அரசியல் இயல்பாக்கம்தான் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதிப் பதவியில் ஆதரித்ததன் மூலம் ராஜபக்சக்களுக்குக் கிடைத்த அரசியல் ஆதாயம்.

இனி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எவ்வாறு செயற்படும் என்பதைத் பார்க்கலாம். இது எதிர்மறையான கருத்தாகத் தோன்றலாம். ஆனால் ரணிலின் வெற்றியில் இனிமேல்தான் பெரமுனவுக்கு அதிகப் பங்கு இருக்கப்போகிறது.

ராஜபக்சக்கள் இல்லையேல் ரணிலின் வெற்றி பிரகாசமாக இருக்கும். இலங்கையில் தேர்தல் வெற்றிக்காக பெரும் அரசியல் கூட்டணிகளை அமைப்பதற்கு முயற்சிக்கின்றனர். இந்தமுறை, தற்போதைய களநிலவரப்படி மூன்று முக்கிய வேட்பாளர்களிடையே போட்டி காணப்படுகின்றது. அதாவது வாக்குகள் மூன்றாகப் பிளவுபடும்.

பொதுவாக, பெரிய தேர்தல் கூட்டணிகள் உருவாக்கப்படும்போது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில், புதிய பங்காளிகள் வேட்பாளருக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிப்பார்கள். அவரது வெற்றி வாய்ப்பை அதிகரிப்பார்கள். ஆனால் புதிய கூட்டாளியின் ஆதரவு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தினால்என்னசெய்வது?

எந்தவொரு அரசியல்வாதியும் தேர்தலில் தனது வெற்றி வாய்ப்புக்களுக்கு எதிராக முடிவெடுக்க மாட்டார். அதனால் பாதகமான வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய கூட்டாளிகளை அவர்கள் தம்முடன் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். அதுபோன்று அமையும் சந்தர்ப்பங்கள் மிக அரிதானவை. ராஜபக்சக்களுடனான கூட்டணி என்பது ரணிலுக்கு அத்தகையதே. இது அவருக்குச் சரியாகத் தெரியும். எனவே ராஜபக்சக்களை இழப்பதென்பது ரணிலுக்கு ஒரு வரமே தவிர இழப்பல்ல.

ஒருவேளை ராஜபக்சக்கள் ரணிலுக்கு ஆதரவு தெரிந்திருந்தால் அது ரணிலின் முகாமுக்குள் எதைக் கொண்டுவந்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

மகிந்த ராஜபக்ச உள்ளூர் அரசியலில் மகத்தானவராகவும், வாக்குகளைவெல்வதில்மிகவும் திறமையானவராகவும் இருந்தார் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும்இல்லை. அதுஅவரதுகுடும்பத்தினர் சுயமாக ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான நிலமை, தன்னுடைய ராஜ வம்சத்தை உருவாக்குவதற்கும், அவரது சகோதரரும் ராஜ வம்ச நீட்சியுமான கோட்டாபய ராஜபக்ச சமாளிக்கக்கூடிய பிரச்சினைகளையே முகாமைத்துவம் செய்ய முடியாது நெருக்கடியாக்கியதற்கும் முன்னரான நிலமை அது.

இப்போது மகிந்த கருத்தியல் அளவிலும் உருவகமாகவும் செத்துப் போனவருக்குச் சமமானவர். அவர் தனது சொந்த வாக்காளர்களை நரமாமிசமாக்கியவர், அவர்களில் பெரும்பாலோர் அவரால் பொருளாதார நெருக்கடியின் சுமையை இன்றும் சுமக்கின்றனர்.

அதேபோன்று, மொட்டுக்கட்சி ஒரு திறமையான தேர்தல் இயந்திரமாகவும் இருந்துள்ளது. அதுவும் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரேதான் நிகழ்ந்தது. ஆனால் இப்போது எஞ்சியிருப்பது அந்த முந்தைய வடிவத்தின் எலும்புக்கூடு மட்டும்தான். சமீபத்திய வாக்கெடுப்பு எண்கள் கூட 7 சதவீத பொது அங்கீகாரத்தை அளிக்கின்றன, முந்தைய 2 சதவீதத்தில் இருந்து அதிகரிப்பு தவறானது. ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச நாணய நிதியத்தால் கட்டளையிடப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளுடன் தொடர்புடைய பொருளாதார மீட்சியின்காரணமாகஇந்தமுன்னேற்றம்ஏற்பட்டால், அது ராஜபக்சக்களால் கடன் வாங்கக்கூடிய ஒன்றல்ல. அண்மைய கருத்துக் கணிப்புக்கள் ஆளும் தரப்பு மீதான மக்களின் நம்பிக்கை, தவறாகக் கூறப்பட்ட 2 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்ந்திருப்பதாகக் கூறப்படும் நிலையில், அத்தகைய எந்தவொரு அதிகரிப்பும் ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச நாணய நிதிய உதவியுடனான பொருளாதாரத் திட்டங்களால் வந்ததே தவிர ராஜபக்சக்களின் செல்வாக்கால் வந்ததல்ல.

அடுத்ததாக, ராஜபக்சக்கள் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்திருந்தால் அதனால் ஏற்படும் பாதகங்களைச் சீர் தூக்கிப் பாருங்கள்.

தற்போது விரும்பியோ விரும்பாமலோ இலங்கைப்பொருளாதாரம் மீட்சிப்பாதையில்சென்று

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ராஜபக்சக்களின் பிரிவு ரணிலுக்கு சாதகமே!

4ம் பக்க தொடர்ச்சி..........

கொண்டிருக்கிறது. உண்மையில், இந்த ஆண்டின் முதல் கால் பாகத்தில் 5.2% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மாதாந்திர கொள்முதல்மேலாளர் குறியீடுகள் ஆரம்பத்தில் கணித்ததைவிட வலுவான மீட்சியை இது வெளிப்படுத்துகின்றது. இருந்தாலும், அந்த சாதகமான மாற்றத்திற்கு ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்பு உண்டு என்பதை அங்கீகரிப்பதில் இன்றும்கூட பெரும்பாலான இலங்கையர்களுக்கு சிக்கல் உள்ளது. ஜனாதிபதி பதவியில் ரணில் தொடர்வதற்கு ராஜபக்சக்கள் வழங்கி வந்த ஆதரவே இதற்குக் காரணம்,

ராஜபக்சக்களின் ஆதரவுடன் ரணில் ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்தமை அவர் மீது, ராஜபக்சக்களின் ராஜ வசம்சத் திட்டதைப் பாதுகாக்கும் ராஜபக்சக்களின் 'பினாமி' என்ற விமர்சனத்தை ஏற்படுத்தியது. ரணிலின் பொருளாதார மீட்சித் திட்டம் ராஜபக்சக்களைத் தாண்டி உலகளவிலானது என்பதை ஒப்பிடும்போது அது ஒரு சூட்சுமமான நிலமை. ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்திடம் போகமாட்டேன் என்று கோட்டாபய ராஜபக்ச பிடிவாதம் பிடித்ததன் மூலம்தான் இந்தப் பொருளாதார நெருக்கடி மிக மோசமானது. அதனுடன் ஒப்பிடும்போது ரணிலின் அடைவு ராஜபக்சக்களைத் தாண்டியது.

ராஜபக்சக்கள் இதுவரையில் ரணிலின் பொ-ருளாதாரத் திட்டங்களுக்கு ஆதரவளித்தது தேசப்பற்றின் காரணமாகவோ அல்லது முழுமையாகச் சரிந்துவிட்ட பொருளாதாரத்தை மீண்டுத் துக்கி நிறுத்துவதற்காகவோ அல்ல. மக்கள் மத்தியில் பரவி வந்த அமைதியின்மையில் இருந்து தம்மையும் சந்ததிகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கான முனைப்பினாலேயே ஆகும்.

மொட்டுக்கட்சியின் ஆதரவின்றி விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது என்பது உண்மை. இலங்கையின் பொருளாதார மீட்சியில் பிரதானமாக இருந்த சர்வதேச நாணய நிதியத்தின் மீட்புப் பொதி மற்றும் ஏனைய பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கைகளை மொட்டுவின் ஆதரவின்றி அவரால் நடைமுறைப்படுத்தியிருக்கவும் முடியாது. இருந்தாலும் ராஜபக்சக்களால் தரைமட்டமாக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பியதற்கான நன்மதிப்பை ராஜபக்சக்களுக்கே வழங்க இலங்கை மக்கள் தயாராக இல்லை. அது விடுதலைப் புலிகள் தலாதா மாளிகையைத் தகர்த்துவிட்டு மீண்டும் கட்டியெழுப்புவதைப் போன்றது.

இப்போது விக்கிரமசிங்க ராஜபக்சவின் சட்டையிலிருந்து வெளியேறிவிட்டார். அதனால் அவருக்குக் கிட்டப் போகும் சாதகங்களை இனிக் கவனிக்கலாம்.

முதலாவதாக, அவரது ஐம்பது ஆண்டுகால அரசியலில் எதையும் விட, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரணில் புரிந்த சாதனைகள் அவரது தேர்தல் பரப்புரையின் மையப்பொருளாக இருக்கும். இப்போது, நாட்டின் பொருளாதார மீட்சிக்கான



பெருமைக்கு அவர் முழுமையாக உரிமை கோரலாம். அதுபோலவே, ராஜபக்சக்களின் நிழலில் இருந்து வெளியேறி விக்கிரமசிங்க தனது கால்களில் தனித்து நிற்கும்போது அவரது பணிகளுக்காக அவரைப் பாராட்டுவது பெரும்பாலான இலங்கையர்களுக்கு இலகுவாக இருக்கும்.

இரண்டாவதாக, ரணில் மிகவும் மாறுபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை இது வழங்கும். மிக முக்கியமாக, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை மௌனமான இருந்து வந்த பெரும்பாலான வாக்காளர்களுக்கு இப்போது ரணில் -சுவாரஸியமானவராகத் தெரிவார்.

மூன்றாவதாக, ராஜபக்சவின் ஆதரவுடன் இயங்கியதால் விக்கிரமசிங்கவைவிட்டு ஒதுங்கியிருந்த சிறுபான்மை வாக்காளர்கள் அவரை நோக்கி ஈர்க்கப்படுவது. குதிரை பேரங்கள் மூலம் சஜித் பிரேமதாசவின் பக்கம் இருக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை இதில் கருத்திலெடுக்கத் தேவையில்லை. ஆனால், பாரம்பரியமாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களான தமிழ், முஸ்லிம் மக்களும் இனம் மற்றும் இனக்குழுக்கள் குறித்து மிகச் சிறியளவில் மட்டுமே கருத்தில் எடுத்துக்கொண்டு தேசியநலனைக் கருத்திக்கொண்டு வாக்களிக்கும் சிறுபான்மை இளைஞர்களும் இப்போது ரணில் பக்கம் ஈர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகி இருக்கின்றன.

இவையனைத்தும், ராஜபக்சக்களைவிட்டு விலகியதன் மூலம் விக்கிரமசிங்கவுக்கு நிகர இலாபமாக அமையும். ராஜபக்சக்களின் ஆதரவை அவர் இழந்திருப்பது அவரது வெற்றிக்கான வாப்புக்களை அதிகரிக்கும். இதற்கு நேர்மாறாக, ராஜபக்சக்களின் தவறுகளுக்கு ரணில் பொறுப்பாளியாகி இருந்தால் சுயநினைவு கொண்ட இலங்கை வாக்காளர்கள் அவருக்கு வாக்களிப்பதை அது தடுத்திருக்கும்.

ரணில்தனக்கு இப்போதுகிடைத்திருக்கும்இந்தவாய்ப்பைப் பயன்படுத்தி, இன்னும் வேகமாகச் செயற்படவேண்டும். சாத்தியமான மிகப்பெரிய தேர்தல் கூட்டணியை உருவாக்கவேண்டும், மேலும் இனவாதிகள் மற்றும் வியாபாரிகளை அந்தக் கூட்டணியில் தவிர்க்கவேண்டும்.

ரணிலைப் புறக்கணித்ததன் மூலம் அவரது வெற்றிக்கு உதவியது அவரது பழைய நண்பரான மகிந்தவுக்கு இதயத்தின் ஆழத்தில் தெரியும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கடத்திச்செல்லப்பட்ட 15 மாடுகளுடன் வவுனியாவில் 3 பேர் கைதாகினர்

**விசேட அதிரடிப் படையினர் நடவடிக்கை**



வவுனியா, நெடுங்கேணி பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கி கப் ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட 15 மாடுகளுடன் மூவர் வவுனியாவிசேடஅதிரடிப்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர் என



வவுனியாபொலிஸார்தெரிவித்தனர்.

வவுனியா விசேட அதிரடிப்படை யினருக்குகிடைக்கப்பெற்றதகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமான வாகனத்தை வவுனியா ஹொரவப்பொத்தான வீதி, 6 ஆம் கட்டைபகுதியில்வைத்துவழிமறித்த விசேடஅதிரடிப்படையினர்சோதனை நடத்தினர்.

இதன்போது குறித்தவாகனத்தில் முறையான அனுமதி ஏதும் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 15 மாடுகளை மீட்டுள்ளதுடன்,வாகனத்தில்பயணம் செய்த காட்டகஸ்கிரிய பகுதியை சேர்ந்தமூன்றுசந்தேகநபர்களையும் கைது செய்துள்ளதுடன் வாகனத்தையும்மீட்டுள்ளனர்.கைது செய்யப்பட்டவர்களை விசாரணை யின்பின்வவுனியாபொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், அவர்களை நீதிமன்றில் மேலதிக விசாரணை களின் பின் நீதிமன்றில் முன்னிலைப்ப டுத்தவுள்ளதாகவும் பொலிஸார்

# பச்சிலைப்பள்ளி முன்பள்ளிகளின் செயற்பட்டு மகிழ்வோம் விழா




பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தினேஸ் முன்பள்ளி மற்றும் வளர்பிறை முன்பள்ளி ,உதயதாரகை முன்பள்ளி மற்றும் அறத்தி நகர் முன்பள்ளி என நான்கு முன்பள்ளிகள் இணைந்து செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா செவ்வாய்க்கிழமை கச்சார்வெளி செல்வபுரம் தினேஸ் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வு பிற்பகல் 2.30 மணியளவில்விருந்தினர்கள்மாலை அனுவத்து அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றி தேசிய கொடி மற்றும் பாடசாலை கொடிகள் ஏற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில்பிரதவிருந்தினராக பொ.விஜயநாதன் (உதவி கல்வி பணிப்பாளர் )ஆரம்ப முன்பிள்ளைபருவ அபிவிருத்தி பிரிவு வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சிவடக்குமற்றும்தலைமை திரு.தம்புராசாடயனீஸ்மற்றும்சிறப்பு விருந்தினர்களாக உப அதிபர்,கிராம அலுவலகர்கள் மற்றும் முன்பள்ளி பிரதேச இணைப்பாளர் மற்றும் கௌரவ விருந்தினர்களாக பளை பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் (சிவில்பாதுகாப்புதிணைக்களம்)முன்பள்ளிகளின்வலய (ஏழமைக்கைகொடுக்கும்உறவுகள்)இணைப்பாளர் ,மற்றும் நலன் விரும்பிகள் பெற்றோர்கள் மாணவ செல்வங்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05 - 113)





காலைக்கதிர் Kalaikkathir

## கனிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு அளம்பில் கடற்கரையில் இருந்து தீர்த்தக் கரைவரை இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு களை மேற்கொள்ள அதிகாரிகள் சென்றிருந்தனர்.

ஆய்வுகளுக்காக கடலோர பாதுகாப்பு திணைக்களம் , கனிய மணல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக் களம் , சுற்றுச்சூழல் திணைக்களம், நீர் வள முகாமைத் துவத்தினர், புவிசரிதவியல் திணைக் களம் இவர்களுடன் இணைந்து கரைதுரைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் மற்றும் அப்பகுதி கிராம சேவையாளர் ஆகியோர் கரையோரத்திற்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் கனியவள மணல் அகழ்விற்கான முன்னாயத்தப் பணிகளில் ஈடுபட்டபோது அங்கு வந்த வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தலைமையிலான மக்கள் கூட்டத்தினர் ஆய்வுப் பணிகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து அங்கிருந்து புறப்பட்ட அதிகாரிகள் மீண்டும் வேறோர் இடத்தில் ஆய்வுகளை முன்னெடுக்க முயன்றனர். ஆனால் உடனடியாக அங்கும் திரண்ட மக்கள் எதிர்ப்புக் காட்டினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. கடைசியில் மக்களின் எதிர்ப்புக் காரணமாக அதிகாரிகள் தமது பணியைக் கைவிட்டுத் திரும்பினர்.

## சாரணர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரணர் இயக்கம் தொடர்பில் எனக்கு நல்ல புரிதல் உள்ளது. எனது குடும்பத்தைச் சேர்ந்த பலர் இந்த அமைப்பில் இணைந்து செயல்பட்டுள்ளனர். சாரணர் இயக்கத்தை மேலும் முன்னேற்ற வேண்டும். சாரணர் இயக்கத்திற்குத் தேவையான கட்டடமொன்றை வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்த கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப் படும். சாரணர் இயக்கம், கெடெட் படைப்பிரிவு மற்றும் இளைஞர் படையணி என்பவற்றுக்குத் தேவையான நிதியை ஆளும்தரப்பு ஒதுக்கியுள்ளது. ஏனைய அமைப்புகளின் செயற்பாட்டிற்கும் ஒரு தொகை நிதியை வழங்க எதிர்பார்க்கிறோம்.

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது திறைசேரியில் பணமிருக்கவில்லை. ஆனால் தற்பொழுது நிதி இருப்பதால் இவ்வாறு பணம் ஒதுக்க முடிந்துள்ளது. நாம் இப்போது கடினமான காலங்களை கடந்துவிட்டோம்.

நட்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களுக்கு பணம் கொடுப்பதை இப்போது நிறுத்திவிட் டோம். மேலும், வெளிநாட்டு கடன்களும் நிறுத்தப்பட்டுள்ளன. நாம் செலுத்த வேண்டிய கடன் தொகையும் குறைந்துள்ளது. எனவே இப்போது அரசிடம் ஓரளவு பணம் உள்ளது. அந்த பணத்தை இளைஞர்களுக்காக பயன்படுத்த எதிர்பார்கிறேன்.

தற்போது கல்விக்கான விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அடுத்த சில வருடங்களில் அதற்கு அதிக நிதி செலவிட நேரிடும். சுகாதாரத் துறைக்கும் தேவையான நிதியை ஒதுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

கல்வித்துறையைபுத்தகங்களுக் கு மட்டும் மட்டுப்படுத்த முடியாது. பிள்ளைகள் முன்னேற புதிய வாய்ப்பு களைக் கண்டுபிடிக்க வேண்டும். எதிர்காலத்தில் அதற்கான பணத்தை செலவிடுவோம்.

சாரணர் இயக்கத்தை அனைத்து பிரிவுகளிலும் முன்னேற்ற எதிர்பார்க்கிறோம். 75,000 உறுப்பினர்களாக உள்ள அங்கத்தவர் தொகை எதிர்காலத்தில் 150,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான ஆதரவை ஆளும் தரப்பு வழங்கும்.

இந்த அமைப்பின் மூலம் நாம் பெரிய அளவில் சாதிக்க முடியும். போதைப்பொருள் ஒழிப்புக் குழுவுடன் கலந்துரையாடிய போது, பாடசாலைகளில் சாரணர் அமைப்புக்கள் மற்றும் கெடெட் படைகள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். போதைப்பொருள் எதிர்ப்புத் திட்டத்தில் இது பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும்.

மாவட்ட அளவிலும், தேசிய அளவிலும் சாரணர் முகாம்களை நிறுவுவதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு அரசாங்கத்தினால் உதவிகளை வழங்க முடியும். அந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத் துவதற்கு கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## 6 வேட்பாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஜூலை 26 வெள்ளிக்கிழமை காலை வெளியிட்டது. அறிவிப்பு வெளியான ஒரு சில மணித்தியாலத்துக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்கீர்த்திரத்ன சுயாதீன வேட்பாளராகவும், புதிய சுதந்திர முன்னணியின் வேட்பாளராக ஓசல லக்மால் அனில் ஹேரத் என்பவரும், இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு எஸ்.ஜி.லியனகே என்பவரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சார்பில் போட்டியிடுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு எஸ்.கே பண்டாரநாயக்கவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ள நிலையில் எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50000 ரூபாவும், சுயாதீன வேட்பாளர் 75000 ரூபாவும் கட்டுப்பணமாக செலுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும். வேட்புமனுக்கள் எதிரவரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை ஏற்றுக்கொள்ளப்படும்.

## ஜனாதிபதியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பு கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் பல்வேறு தேவைகள் மற்றும் அபிவிருத்தி பற்றி ஜனாதிபதியுடன் குகதாசன் கலந்து ரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.

## பொய் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுமக்களின் இதர தேவைகளுக்காக, தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர்களின் தேர்தல் வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பான தகவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின்ழுழுழு.எயிளஉ-மிஷ்லிஜவி.ஆலிஸ.யிவ என்ற இணையத்தளத்தின் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஓகஸ்ட் 15க்கு முன்னர் ஒப்படைக்க முடியும் என சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் தகவல்கள் போலியானதாகும்.

தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர் தேர்தல் ஆணைக் குழுவினால் அறிமுகப்படுத் தப்பட்டுள்ள www.elections.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ தகவலின்படி, ஓகஸ்ட் 5 நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டத்தின் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலக அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் - என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# ஆடி அமாவாசை விரதத்தின் மகத்துவம் யாரெல்லாம் கடைப்பிடிக்கவேண்டும்?



ஆடி அமாவாசை விரதம் யார் யாரெல்லாம் அனுஷ்ட்டிக்க வேண்டும்? எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும்? யார் அனுஷ்டிக்க கூடாது? என்பதையெல்லாம் இந்துக்கள் அறிந்திருக்க வேண்டும்.

பொதுவாக ஆடி அமாவாசை என்றாலே தந்தையை இழந்தவர்கள் உபவாசம் இருந்து பிதிர்க்கடன் செலுத்தி தீர்த்தமாடலுக்கான தினம் என்பது தெரியும்.

கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் மற்றும் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை மகோற்சவம் இதற்கு உகந்தது என்பர். அங்கு அந்த நாளில் ஆயிரக்கணக்கான அடியார்கள் ஒன்றுகூடி பிதிர்க்கடன் செலுத்தி வழிபடுவது வழக்கம்.

இவ் வருடத்திற்கான ஆடி அமாவாசை விரதம் ஓகஸ்ட் 4 ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கபடவிருக்கிறது..

இந்த நாளில் யார் அமாவாசை விரதம் இருக்க வேண்டும் என்பதை விரிவாக பார்ப்போம்.

பொதுவாக அமாவாசை தினத்தில் முன்னோர்களை வழிபடும் விதமாக விரதம் இருப்பது வழக்கம். யார் யார் அமாவாசை விரதம் இருக்கலாம், தை அமாவாசை தினத்தில் ஆண், பெண் ஆகியோரின் விரதம் முறை பற்றி பார்ப்போம்.

### பெண்கள் விரதம் இருக்கும் முறை:

* திருமணமான ஒரு பெண்ணுக்கு தாய் அல்லது தந்தை இல்லை என்றாலோ, அல்லது இருவரும் இல்லை என்றாலும் அவர் விரதம் இருக்கக் கூடாது. அவருக்கு கணவர் இருக்கும் நிலையில் அவர் அமாவாசை விரதம் இருக்கக் கூடாது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அமாவாசை விரத முறை தை அமாவாசைக்கு மட்டுமல்ல, மற்ற மாதங்களில் வரும் அமாவாசை தினத்தில் இருக்க வேண்டிய விரத முறைக்கும் பொருந்தும். ஆடி அமாவாசை மகாளய அமாவாசை, தை அமாவாசை மிகவும் விசேஷமாக கொண்டாடப்படும், கடைப்பிடிக்கப்படும் அமாவாசையாக உள்ளது.

* பெண்ணிற்கு சகோதர்கள் இருப்பின் அவர்கள் பெண்ணின் பெற்றோருக்கு தர்ப்பணம், விரதம் இருப்பார்கள்.

* அப்பா இல்லை என்றால் அம்மா தர்ப்பணம் கொடுப்பார், விரதம் இருப்பார்.

* அம்மா இல்லை என்றால் அப்பா தர்ப்பணம் கொடுப்பார், விரதம் இருப்பார்.

அப்படி சகோதர் இல்லை, பெற்றோர் இருவரும் இல்லை என்றால் பெண்கள் கோயிலுக்கு சென்று தானம் கொடுக்கலாம், வீட்டிற்கு வந்து நான்கு பேருக்கு இலையில் சோறு போட்டு உணவளிக்கலாமே தவிர அமாவாசை விரதத்தை பெண் ஒருவர் கடைப்பிக்கக் கூடாது.

ஆடி அமாவாசை அன்று ஏன் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்?: தர்ப்பணதிற்கு உரிய நாட்கள் இதோ

1. ஒரு ஆணுக்கு தாய் இல்லாவிட்டாலோ, தந்தை இல்லாவிட்டாலோ, அல்லது இருவரும் இல்லை என்றாலோ அவர் அமாவாசை விரதத்தை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

2. அமாவாசை அன்று உபவாசம் இருக்க வேண்டும்.

3. கண்டிப்பாக எள்ளும், தண்ணீரும் இரைத்து முன்னோர்களை வழிபட வேண்டும்.

4.அமாவாசை தினத்தில் கோயிலுக்கு சென்று நெய் தீபம் ஏற்றி வழிபடவும்.

5. இயன்றவரை யாருக்காவது உணவு தானம் செய்யுங்கள் அல்லது பசுவிற்கு அகத்திக் கீரை கொடுங்கள்

அமாவாசை அன்று பெண்கள் நன்றாக சாப்பிட்ட பின்னர் விரதத்திற்கான உணவை சமைக்க வேண்டும். கணவர் தான் விரதம் இருக்க வேண்டும். பெண்கள் விரதம் இருக்கக் கூடாது.

ஒரு கைப்பிடி அளவேனும் அன்னத்தை பெண்கள் இரவு உணவில் சேர்ப்பது பூரண ஆசி கிட்டும்.

அமாவாசை தினத்தில் முன்னோருக்கு வழிபாடு நடத்துவது அவசியம். தாய், தந்தையர்களை யார் வழிபடுகிறார்களோ, அவர்களின் பிள்ளைகளும் நல் பலன்கள் கிடைக்கும்

யாருக்கெல்லாம் தர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது பற்றிப் பலருக்கும் சந்தேகம் ஏற்படுவது இயல்பு.

மறைந்துவிட்ட தன் தகப்பனார், தன் தாத்தா, கொள்ளுத்தாத்தா, தன் அம்மா, தன் பாட்டி, தன் கொள்ளுப் பாட்டி, அம்மாவின் கோத்திரம் - அவர்களின் பரம்பரை, அப்பாவின் கோத்திரம் - அவர்களின் பரம்பரை என்று பன்னிரண்டு பேருக்குத் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

மேலும், யாருமில்லாத ஆதரவற்று இறந்தவர்களுக்கும் தர்ப்பணம் செய்வது மிகவும் விசேஷமாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

புண்ணிய தலம் – தீர்த்தக் கரைகளில் தர்ப்பணம் கொடுக்க முடியாத சூழலில் வீட்டிலேயே முன்னோரை ஆராதிக்கலாம். படையல் இட்டு அவர்களை வழிபட்டு முன்னோரின் ஆசியைப் பெறலாம். பசுக்களுக்கு அகத்திக் கீரை உண்ணக் கொடுப்பது மிகவும் சிறப்பு

ஆடி அமாவாசை மற்றும் அதற்கு முந்தைய தினம் ஆகியவற்றின் மகிமையை விளக்கும் வகையில் ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. அழகாபுரி என்ற தேசத்தின் அரசர் அழகேசன். அவருக்குப் பிறகு தேசத்தை ஆட்சி செய்ய வாரிசு இல்லை. அதற்காக புத்திரபாக்கியம் வேண்டி மனைவியுடன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார். அதன் பயனாக அவருக்கு ஒரு மகனும் பிறந்தான். குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் அரசர் இருந்தபோது, 'உன் மகன் இளமைப் பருவத்தை அடையும்போது மரணம் அடைவான்' என்பதாக ஓர் அசரீரி ஒலித்தது. மேலும் இறந்த பிறகு அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால், வரப்போகும் மனைவியின் மாங்கல்ய பலத்தினால் மறுபடியும் அவன் உயிர் பெறுவான் என்றும் அந்த அசரீரி கூறியது.

அசரீரி கூறியதுபோலவே அரசரின் மகனும் இளமைப் பருவம் அடைந்தபோது இறந்து போனான். அரசர் இறந்துபோன தன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கப் பெண் தேடியபோது, பெற்றோர் இல்லாமல் உறவினர்களின் கொடுமைக்கு ஆளாகி விரக்தியுடன் வாழ்ந்து வந்த ஒரு பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்து வைத்துவிட்டனர். அன்று இரவு அந்தப் பெண்ணையும், அரசரின் இறந்துபோன மகனையும் காட்டில் கொண்டு சென்று விட்டுவிட்டு வந்தனர்.

அந்தப் பெண் தன் கணவன் உறங்குகிறான் என்று நினைத்துக்கொண்டிருந்தாள். பொழுது விடிந்ததும்தான் தான் திருமணம் செய்துகொண்டவன் இறந்துவிட்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது. அழுது புரண்டு கதறினாள். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். தனக்குத் தெரிந்த தெய்வங்களை எல்லாம் அழைத்துக் கதறி அழுதாள். பேதைப் பெண்ணின் அழுகுரல் கேட்டு மனம் இரங்கிய அம்பிகை, இறந்துபோன அவளுடைய கணவனை உயிர் பெறச் செய்தாள்.

தனக்கு அருள் புரிந்த தேவியிடம் அந்தப் பெண், ''தாயே ஈஸ்வரி, இருண்டு போன என் வாழ்க்கையை மறுபடியும் பிரகாசிக்கச் செய்தது போலவே, இந்த நாளில் உன்னை வழிபடும் பெண்களுக்கும் அருள் புரியவேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

இந்த நிகழ்ச்சி நடந்தது ஆடி அமாவாசைக்கு முந்தின நாள் ஆகும்.

மற்றவர்களின் நன்மைக்காக வேண்டிக் கொண்ட அந்தப் பெண்ணின் உயர்ந்த குணத்தைப் போற்றும் வகையில், ''மகளே, நீ வேண்டிக் கொண்டபடியே இந்த நாளில் உனக்கு நான் அருள்புரிந்த கதையைப் படித்துவிட்டு, மறுநாள் ஆடி அமாவாசையன்று விரதம் இருந்து, மஞ்சள், குங்குமம் உள்ளிட்ட மங்கலப் பொருட்களை சுமங்கலிப்பெண்களுக்குத் தந்து என்னை வழிபடுபவர்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பதுடன், அவர்கள் இல்லத்தில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் உண்டாகும்'' என்று வரம் தந்து அருளினாள். அந்த வகையில் ஆடி அமாவாசை முன்னோர் வழிபாட்டுக்கு மட்டுமல்லாமல், அம்பிகையை வழிபடுவதற்கும் உகந்த நாளாகத் திகழ்கிறது.

மாதம்தோறும் வரும் அமாவாசை திதியில் மறைந்த நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும் என்பது சாஸ்திரம். மாதம்தோறும் கொடுக்க முடியாவிட்டாலும், ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை, தை அமாவாசை ஆகிய தினங்களில் கண்டிப்பாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும்.

சாஸ்திரப்படி ஆடி முதல் மார்கழி முடிய உள்ள காலத்தில் நம்முடைய முன்னோர்களான பித்ருக்கள் நம்மைப் பார்ப்பதற்காக இந்த உலகத்துக்கு வருகின்றனர். அவர்கள் பித்ரு லோகத்தில் இருந்து புறப்படும் நாள் ஆடி அமாவாசை. எனவே, அவர்களை நாம் நினைவில் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பது போலவும், அவர்களை பூமிக்கு வரும்படி அழைப்பு விடுப்பதுபோலவும் ஆடி அமாவாசையன்று அவர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும் என்கிறது சாஸ்திரம். அவர்கள் பூமிக்கு வந்து சேரும் நாள் மகாளய அமாவாசை ஆகும். எனவே, அன்று அவர்களுக்கு நாம் தர்ப்பணம் கொடுக்கவேண்டும். பித்ருலோகத்தில் இருந்து வந்த நம் முன்னோர்கள் திரும்பவும் பித்ருலோகத்துக்குச்



செல்லும் நாள் தை அமாவாசை. அன்று அவர்களை வழியனுப்பும் விதமாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும். இந்த மூன்று அமாவாசை தினங்களில் நாம் கண்டிப்பாக நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும்.

முன்னோர்

ஆடிஅமாவாசையன்றுபித்ருவழிபாட்டைகாலையிலேயே தொடங்கிவிடவேண்டும். ஏதேனும் ஒரு தீர்த்தக் கரைக்குச் சென்று நீராடி, தர்ப்பணம் கொடுத்து வரவேண்டும். மதியம் வீட்டில் மறைந்த நம் முன்னோர்களின் படங்களுக்கு மாலை அணிவித்து, விளக்கேற்றி, ஓர் இலையில் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான உணவு வகைகளைப் படைக்கவேண்டும். பின்னர் தீபாராதனை காட்டி, காகத்துக்கு உணவளிக்க வேண்டும். பிறகு வீட்டில் உள்ள பெரியவர்களை முதலில் சாப்பிடச் செய்யவேண்டும். பிறகே நாம் சாப்பிடவேண்டும். இப்படிச் செய்வதால், நம் முன்னோர்கள் மிகவும் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிக்கின்றனர். அவர்களுடைய ஆசிகளால் நம் வாழ்க்கையும் நம் சந்ததியினரின் வாழ்க்கையும் மகிழ்ச்சியும் சகல செல்வங்களும் நிறைந்ததாக அமையும் என்பது உறுதி.

**வி.ரி.சகாதேவராஜா**

## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(எம் சியாஜ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால்வருடாந்தம் வழங்கப்படும் கலாபூஷண விருதுக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி 2024.08.10 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான கலைஞர்கள் முடிவு திகதிக்கு முன்னர் பூரணபடுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தையும், துறை சார்ந்த இதர ஆவணங்களையும் உங்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (05)

## பஸ்ஸில் யுவதி மீது பாலியல் சேஷ்டை

### ஓய்வு பெற்ற அதிபர் கைது

பஸ்ஸிற்குள் வைத்து யுவதி ஒருவர்மீதுபாலியல்சேஷ்டை புரிந்தார் எனக் கூறப்படும் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் காலி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றிய ஓய்வு பெற்ற அதிபரொருவராவார்.

சந்தேக நபர் கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றில் இருக்கும்போது அதே பஸ்ஸில் பயணித்த 25 வயதுடைய யுவதி ஒருவர் மீது பாலியல் சேஷ்டை புரிந்துள்ளார்.

பின்னர், இந்த பஸ்ஸின் நடத் துனர் இது தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்தனர். (05)

## சுவரில் மோதியது ஓட்டோ செலுத்திய சிறுவன் சாவு



காலிவீதியில்கொரலவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிறுவனொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து செவ்வாக் கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று வீடொன்றிற்கு முன்னால் உள்ள சுவரொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஓட்டோவை ஓட்டிச் சென்ற சிறுவன் படுகாயமடைந்துள்ள நிலையில் பாணந்துறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

நாகொடை, தியதஹேன பகுதியில் வசிக்கும் 17 வயதுடைய சிறுவனொருவரே உயிரிழந்துள்ளார். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் அபிவிருத்தியைக் கருதி மக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும்

### மு.கா பிரதித்தலைவர் ஹரீஸ் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டினுடைய தலையெழுத்தை தீர்மானிக்கின்ற தேர்தல். இந்த நாட்டை வளர்ச்சி அடைய செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்ற கடமை நாட்டு மக்களுக்கு இருக்கிறது.

பல பட்டதாரிகள் பட்டம் பெற்று நாட்டை முன்னேற்றும் அறிவாற்றலுடன் வெளிவருகின்ற போதும் அவர்களுக்கான தொழில் வாய்ப்பை கொடுக்க முடியாத நிலையில் இந்த நாடு இருக்கிறது. ஆனால் அதிக வளம் நிறைந்த நாடு இலங்கை. மட்டுமின்றி அதிக கோடீஸ்வரர்களின் கவனத்தை ஈர்த்த நாடாகவும் இலங்கை இருக்கிறது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் தெரிவித்தார்.

ஒலுவில்பிரதேசத்தில்இடம்பெற்றநிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது -

ஹெலான் மாஸ்காக இருக்கட்டும் அல்லது இந்திய பெரும் தொழிலதிபர்களாக இருக்கட்டும். இந்த நாட்டினுடைய பட்ஜெட் என்பது அவர்களின் ஒரு நிறுவனத்தினுடைய பட்ஜெட்டை விட குறைவு. கொக்கோகோலா நிறுவனமோ டொயோட்டா நிறுவனமோ அல்லது ஹெலான் மாஸ்கின்னுடைய நிறுவனமாக இருந்தாலும் அவர்களுடைய ஒரு வருட பட்ஜெட்டை விட குறைவாகத்தான் இலங்கை நாட்டினுடைய பட்ஜெட் இருக்கிறது. 14 பில்லியன் அமெரிக்க டாலர் என்பது பணக்காரர் அம்பானி உடைய ஒரு வருட பட்ஜெட்டை விட குறைவு

எமது நாட்டின் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட பிழைதான் நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச



இருக்கின்ற போது குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போல இந்த நாட்டை மோசமாக்கி விட்டார். இந்த நாடு இப்போது பத்து வருடம் பின்னோக்கி தள்ளப்பட்டு இருக்கிறது. காரணம் பெரும்பான்மை சிங்களவர்கள் அவருக்கு அளித்த வாக்கே காரணம். ஆதலால் நாட்டு மக்கள் இன்னும் ஒரு தடவை நாட்டை பின்னோக்கி செல்ல விடாது இந்த நாட்டை வளர்ச்சி அடைய செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து செயல்படுங்கள். - என்றார். (05)

# அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் ஊடக சந்திப்பு நேற்று நடந்தது!

விவசாயி, தொழிலாளர் மலையகத் தொழிலாளர் மற்றும் குடும்பத் தலைமைத்துவப் பெண்கள்




உட்பட அனைத்து துறைசார் தொழிலாளர் சமூகங்களின் பிரதிநிதிகள் இணைந்ததே இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு நேற்று (புதன்கிழமை) இதன் வட மாகாண பொதுச்சபை கூட்டம் நடாத்தப்பட்டது. அக்கூட்டத்தின் பின் ஊடகவியலாளர் சந்திப்பு நடாத்தப்பட்டது.

அச்சந்திப்பின் போது அரசு அரசாங்கம் மற்றும் பொறுப்புமிக்கவர்களுக்கு முன் வைக்கப்படுகின்ற வட பகுதி மீனவர்கள் பல வருடங்களாக இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இதற்கு கொள்கை ரீதியான தீர்வு ஒன்றை எடுப்பதற்காக உடனடியாக பொறிமுறைஒன்றைஉருவாக்கப்படவேண்டும்.

கரையோரபிரதேசங்களில்பயன்படுத்தப்படுகின்ற அனைத்துவிதமானசட்டவிரோதமீன்பிடிமுறைகளும் நிறுத்தப்பட்டு இயற்கை சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடற்றொழில் அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ள கடற்றொழில் கொள்கை மீள திருத்தப்பட வேண்டும். அதற்காக மீனவ மக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவு அதிகரித்த போதும் அவர்களின் உற்பத்திகளுக்கு நியாயமான விளை வழங்கப்படுவது கிடையாது. எனவே விவசாயிகளுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும்.

விவசாயிகள் உற்பத்திச் செலவுக்காக அதிக கடன்பட்டுள்ளார்கள். எனவே, இவர்களின் கடன் கமையைக் குறைப்பதற்கான மானிய செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700ரூபாவாக அதிகரிப்பதாகக் கூறி இன்று அவர்கள் ஏற்றப்பட்டிருக்கின்றார்கள். எனவே, வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

மலையகமக்களின்காணிமற்றும்வீட்டுரிமையை உறுதிப்படுத்துவதற்கு சாதகமான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். தொடர்ச்சியாக இவர்கள் ஏமாற்றப்படுவது தடுக்கப்பட வேண்டும். அதேபோல் தோட்ட அதிகாரிகளால் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுவதை தடுப்பதற்கு நிரந்தரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட புதிய தலைமைத்துவ குடும்பங்களுக்கான அபிவிருத்தி மேற்கொள்ளப்படுவதாககூறுகின்றபோதும்இன்னும் முழுமையாக அவர்களுக்கான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவது கிடையாது. எனவே இவர்கள் தொடர்பாக விசேட் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வலிந்துகாணாமலாக்கப்பட்டுள்ளகுடும்பங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இதுவரை எந்தவிதமானஉரியபதில்களும்வழங்கப்படவில்லை. எனவே இது தொடர்பான நடவடிக்கைகளுக்காக விசேடதிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.(05)

# கிராண்ட்பாஸ் இரட்டைக்கொலையில் சுட்டவர் உள்ளிட்ட மூன்று பேர் கைது

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையைச் செய்த துப்பாக்கிச் சூடு நடத்தியவர், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்மற்றும்கொலைக்குஉதவியவர் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருகொடவத்தை மற்றும் வெல்லம் பிட்டிய பகுதியைச் சேர்ந்த 26, 37 மற்றும் 45 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி வதுல்லவத்தை புரதர செவன அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக ஓட்டோவில் சென்ற நபர் ஒருவரும் பெண்ணும் சுட்டுக்கொல்லப்பட்டனர். (05)

# நீதித்துறையுடன் அதிகளவில் மோதலில் ஈடுபட்டவர் ரணிலே

### புரவெசி பலவய அமைப்பு கடும் விமர்சனம்



2015இல்நல்லாட்சிஅரசாங்கத்திற்கு ஆதரவளித்த புரவெசி பலய என்ற அரசியல்அமைப்புஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்துள்ளது.

தேசபந்து தென்னக்கோன் விவகாரத்தை கையாண்டுள்ள விதத்தின் மூலம் ஜனாதிபதி நாட்டில் ஒரு விவகாரத்தை உருவாக்கியுள்ளார் என இந்த அமைப்பின் உறுப்பினர் காமினிவியங்கொட தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தி;ற்கும் நீதித்துறைக்கும் மோதல் குறித்த ஜனாதிபதியின் சமீபத்தைய கருத்து தேர்தல் பிற்போடப்படலாம் என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது என காமினிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் தொடர்ச்சியாக நீதித்துறையுடன் மோதலில் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், முன்னைய எந்த ஜனாதிபதியையும் விட தற்போதைய ஜனாதிபதியே நீதித்துறையுடன் அதிக மோதல்களில் ஈடுபட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம், நீதித்துறையை விட பெரியது என காண்பிப்பதற்குஜனாதிபதிமுயல்கின்றார்எனத் தெரிவித்துள்ள காமினிவியாங்கொட நீதித்துறைதனக்குகட்டுப்படவேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சமீபத்தைய கருத்துக்கள் அவர் மீண்டும் தேசபந்து தென்னக்கோனை பதவியில் அமர்த்த முயல்கின்றார் என்பதை புலப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 21 நாள்களின் பின்னர் ஜனஸா நல்லடக்கம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கம்போடியாவில் மரணமடைந்த ஓட்டமாவடியைச்சேர்ந்தமௌலவியின் ஜனாஸா 21 நாள்களின் பின்னர் கம்போடியா நாட்டில் நேற்று (புதன் கிழமை) நல்லடக்கம் செய்யப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - 2 ஆம் வட்டாரம் ஜீ.எஸ்.வீதியைச் சேர்ந்த மௌலவி ஒருவர் கம்போடியா நாட்டில் கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி மரணமடைந்தார்.

தொழில் நிமித்தம் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கையிலிருந்து சென்ற இவர் மரணமடைந்துள்ளார்.

தனது அறையில் இருந்த நிலையில் குறித்த நபர் மரணமடைந்த தகவல் கம்போடியா நாட்டிலிருந்து தமக்கு கிடைத்ததாக மரணமடைந்த நபரின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்த நபர் கலேவெல பகுதியைச் சேர்ந்தவரும் ஓட்டமாவடி பகுதியில் திருமணம் முடித்துவசித்துவந்தவருமான இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய மௌலவி எம்.எம்.அயூப் கான் என்பவராவார்.

மரணமடைந்தநபரின்ஜனாஸாவை கம்போடியா நாட்டில் நல்லடக்கம் செய்ய குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்ததுக்கமையஅவரின்ஜனாஸா 21 நாள்களின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. மரணமடைந்த நபர் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் ஆகியோர்களின் மதினியின்கணவரும், வாகரைபிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் ஜெமீலின் மைத்துனருமாவார்.(05)

# கல்முனை கார்மேல் பற்றிமா மாணவர்களுக்கு நுகர்வோர் அதிகார சபையால் விழிப்புணர்வு





(எம்.என்.எம்.அப்ராஸ்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை உயர்தர பிரிவு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி பாடசாலையின் அதிபர் அருட் சகோ.எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம்.ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஐ.எல்.மார்ஜூன், எம்.எச்.எம்.றிபாஜ் ஆகியோருடன் பாடசாலையின் உயர்தர பிரிவு பகுதித் தலைவர்கள் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.(05)

# கிளிநொச்சி மீனவர்களுக்கு மீன்பிடி வலை அன்பளிப்பு

## சீன அரசின் உதவித் திட்டத்தின் கீழ்



சீன அரசாங்கம் வடக்கு, கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் மீனவர்களுக்கு பொருத்து வீடு, அரிசி என்பவற்றை ஏற்கனவே வழங்கிய நிலையில் மற்றுமொரு வாழ்வாதார உதவியாக மீனவர்களுக்கு வழங்குவதற்காக மீன்பிடி வலைகள் கிளிநொச்சி கொண்டுவரப்பட்டன.

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அலுவலகத்திற்கு பாரஊர்தியில் வலைகள் கொண்டுவரப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1060 மீனவர்களுக்கு குறித்த வலைகள் வழங்கப்படவுள்ளன. (05)

# மருதமுனை மாணவன் தேசியத்துக்குத் தெரிவு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டம் மருதமுனையை சேர்ந்த எம்.என்.எம்.அபியத் என்ற மாணவன் மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தரம் 8 - 9 போட்டி பிரிவில் பங்கு பற்றி இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மாணவரான இவர் பல் வைத்திய நிபுணர் எம்.ஐ.எம்.நௌஷாத் மற்றும் ஆசிரியை ஏ.சி.ஷபானா ஆகியோரின் புதல்வராவார்.



மாணவனின் குறித்த இந்த வெற்றிக்கு வழிகாட்டிய பொறுப்பு ஆசிரியர், பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட நிர்வாகத்தினருக்கும் ஊக்குவித்த மாணவனின் பெற்றோருக்கும் கல்வி சமூகம் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளது. (05)

# இத்தாவில் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி இருவர் காயம்

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் ஏ9 வீதியில் யாழ்.நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தாயும் மகளும் இத்தாவில் பாடசாலை ஒன்றிற்கு திரும்ப முற்பட்ட வேளை எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அங்கிருந்த இளைஞர்களால் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ஆங்கில தின போட்டி ஒன்றிற்காக தனது மகளை பாடசாலைக்கு ஏற்றி சென்ற வேளையே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05-113)

# அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் வைத்திய அத்தியட்சகர் தமக்கு அவதூறு ஏற்படுத்தினார், கடமைக்கு இடையூறு விளைவித்தார் உள்ளிட்ட 5 முறைப்பாடுகள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது.

அதன் போது, முன்னாள் வைத்திய அத்தியட்சகர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி , வழக்கின் இரு தரப்பினரும் வைத்திய துறை சார்ந்தவர்கள் என குறிப்பிட்டதுடன், வழக்கை இணக்கசபைக்கு மாற்றுமாறு மன்றில் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அதற்கு முறைப்பாட்டாளர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபணை தெரிவித்ததுடன், வைத்தியர் பொலிஸ் நிலையம் சென்று தான் குற்றம் சாட்டிய நபர்கள் தொடர்பிலான ஆதாரங்களை இதுவரையில் வழங்காதமை தொடர்பிலும் மன்றில் சுட்டிக்காட்டினார்கள்.

அதனை தொடர்ந்து வழக்கை எதிர்வரும் 09 ஆம் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த மன்று, வைத்தியரை பொலிஸ் நிலையம் சென்று வாக்குமூலம் வழங்குமாறும் கட்டளையிட்டது.

# சட்டவிரோதமாக எடுத்துவந்த உலர்ந்த மஞ்சள் பொதிகளுடன் இருவர் கைது



புத்தளம், கற்பிட்டி, உச்சமுனை கடற்கரைப் பகுதியில் படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட உலர்ந்த மஞ்சள் பொதிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.


கடல் மார்க்கத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 44 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 749 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் (17 பொதிகள்) மற்றும் படகு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# திறன் பலகையை திறமையுடன் கையாளும் வலிகாமம் சிறார்கள்





நேற்றுடன் நிறைவடையும் ஜூலை மாதத்தில் வலிகாமம் கல்விவலயத்தில் உள்ள 9 பாடசாலைகளின் திறன்பலகை தொகுதிகளும் உத்தியோகபூர்வமாக கற்றல்நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டு திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இத்திறன் பலகைதொகுதிகள் ஜஎம்எச்ஓ அமெரிக்கா மற்றும் இலண்டன் ரட்ணம் பவுண்டேசன் ஆதரவுடன் வழங்கப்பட்டு ஆசிரியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டது. இவ்வாசிரியர்கள் தமது மாணவர்களுடன் இத்திறன் பலகைத்தொகுதியூடாக மேற்கொண்ட கற்றல்கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்ப வைபவநாளில் அவதானிக்க சந்தர்பம் கிடைத்தது.

அதிலும் கடந்த 30 ஆம் திகதி தொல்புரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மற்றும் திருவடி நிலை ஃகல்வயல் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகியவற்றின் செயற்பாடுகளை பார்த்தபோது மகிழ்சியேற்பட்டது. சிறார்கள் மிக இலகுவாகவும் திறமையாகவும் திறன்பலகையை கையாழும் திறனை பெற்றிருந்தமை சிறப்பானது.

இப்பாடசாலைகள் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களை கொண்டிருந்தமையால் எல்லா மாணவரும் இலகுவாக திறன்பலகையூடாக கற்கும் கையாளும் சந்தர்பத்தை பெற்றிருந்தமை அவர்களது செயற்பாட்டில் புலப்பட்டது. இது அவர்களுடைய கற்றல் பெறுபேறுகளில் நிச்சயமாக நல் மாற்றத்தை தரும். (05)



காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2024இல் வெளியிடப்பெற்றது